# மோடியின் தீபாவளி பரிசு ஜாக்பாட்தான்!

**மணிலா, ஆசிய வளர்ச்சி வங்கியின், முன்னாள் மூத்த பொருளாதார நிபுணர், முனைவர் டி.கே. ஜயராமன் கூறியிருப்பதாவது:**

பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின உரையில், மக்களுக்கு தீபாவளி பரிசாக, ஜிஎஸ்டி வரி சீர்த்திருத்த அறிவிப்பை வெளியிட்டார். 2021ல் இருந்து பல தளங்களில் வரிச் சீர்திருத்தங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இந்தியா, ரஷ்யாவின் பொருளாரங்கள் 'இறந்த பொருளாதாரம்' என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் விமர்சித்த சூழலில், அமெரிக்காவின் ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் குளோபல் கடன் மதிப்பீட்டு நிறுவனம், தனது ஆண்டு அறிக்கையில், இந்தியாவின் கடன் மதிப்பீட்டை 'பிபிபி' (கடனை திருப்பி செலுத்தும் திறன் அதிகரிப்பு) ஆக உயர்த்தியிருந்தது. 18 ஆண்டுஉகளுக்கு பிறகு இந்திய பொருளாதாரம் இந்த இடத்துக்கு வந்தள்ளது.

## மாறப்போகும் பட்டியல்?

பிரதமர் மோடியின் ஜிஎஸ்டி வரிச் சீர்த்திருத்த அறிவிப்பின் அடிப்படையில், நடைமுறையில் உள்ள 5, 12, 18 மற்றும் 28 வரிகள் நீக்கப்பட்டு, 2 அடுக்கு மட்டும் இருக்கும் என்று கூறப்படுகறது. இதில், உணவுப்பொருள், எப்எம்சிஜி பொருட்கள் 5 சதவீத பட்டியல், சிறிய பைக், கார்கள் 18 சதவீத பட்டியலிலும், வைரங்கள், புகையிலை, மது ஆகியவை 40 சதவீதத்திலும் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரி சீர் திருத்தம் அமலானால், நாட்டின் ஜிஎஸ்டி சராசரி வரி விகிதம் 2026 27ம் நிதியாண்டில் 9.5 சதவீமாகலாம். முன்னதாக, இது 2019ல் 11.6 மற்றும் 2017ல் 14.4 சதவீதமாகவும் இருந்தது. சுவிட்சர்லாந்தின் யுபிஎஸ் வங்கி, ஜிஎஸ்டி வரி சீர்திருத்த அறிவிப்பால் ஆண்டுக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படலாம் என்று கணித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் மட்டும் 43 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இழப்பை ஏற்படுத்தும். அதையும் கூட, ரிசர்வ் வங்கி வழங்கும் வருடாந்திர ஈவுத் தொகை சரிகட்டும்.

அதே நேரத்தில், ஜிஎஸ்டி வரி



குறைப்பு, மக்கள் மத்தியில் நுகர்வு கலாச்சாரம் விரைவாக அதிகரிக்கும். இதனால், ஆண்டுக்கு 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்றும் ஆய்வு குறிப்பிடுகிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, அதிக நுகர்வுக்கு வழிவகுக்கும். அதிக நுகர்வால் ஜிஎஸ்டி வருவாயும் உயரும். சோழ மன்னனுக்கு அவ்வை ஆசி வழங்கியதைப் போன்றது: "வரப்பு உயர, நீர் உயரும்."

கடந்த ஜூலையில் பணவீக்கம் 1.55 சதவீதமாக இருந்தது. இது ரிசர்வ் வங்கி நிர்ணயித்த 2 சதவீத இலக்கைவிட குறைவானது. இது இப்போதைய 5.00 ரெப்போ வீதத்திலிருந்து 4.75 சதவீதமாக குறைய வழிவகுக்கும். இன்று நிறைவடையும், ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்துக்கு பின், மாநிலங்களின் ஒருமித்த ஒத்துழைப்புடன், மத்திய அரசு, விகிதக் குறைப்பைச் செயல்படுத்தும் என எதிர்பார்க்கலாம். அது நாட்டு மக்களுக்கு தீபாவளி ஜாக்பாட் ஆக இருக்கலாம்.